# வீட்டு வன்முறையும் குடும்ப வன்முறையும்

## அவுஸ்திரேலியாவில் குடும்ப வன்முறை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை

வீட்டு வன்முறையும் குடும்ப வன்முறையும் சட்டத்திற்கெதிரான குற்றங்கள்

ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும், இக்குற்றங்களை இழைக்கும் யாருக்கும் சிறைத்தண்டனை கிடைக்கக்கூடும்.

> நீங்களோ உங்களுக்குத் தெரிந்த எவருமோ ஆபத்திலிருந்தால் **000** இல் பொலிசாரை அழையுங்கள்.
>
> அவுஸ்திரேலியாவிலுள்ள பொலிசார் பாதுகாப்பானவர்கள், நம்பத் தகுந்தவர்கள்.
>
> இலவச, இரகசியம் பேணும் ஆலோசனைக்கும் தகவல்களுக்குமாக **1800 737 732** இல் 1800RESPECT ஐ அழையுங்கள்.
>
> உங்களுக்கு ஓர் இலவச உரைபெயர்ப்பாளர் தேவையாயின் **131 450** ஐ அழையுங்கள்.

## எச்சூழ்நிலைகளிலும், வீட்டு வன்முறையையும் குடும்ப வன்முறையையும் Australian Government சகித்துக்கொள்வதில்லை.

வாழ்க்கைத் துணைவரை அவரது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் அவரை மிரட்டுவதன் மூலம் அவரைக் கட்டுப்படுத்த முயலும் நடத்தை வீட்டு, குடும்ப வன்முறையில் அடங்கும். கீழ்வருவன வீட்டு, குடும்ப வன்முறையில் அடங்கலாம்:

- தாக்குவது;
- மூச்சுத் திணற வைப்பது;
- அத்தியாவசியமாகத் தேவைப்படும் பணத்தை துணைவர் அல்லது குடும்பத்திற்குத் தராமலிருப்பது;
- நண்பர்களிடமிருந்தும் குடும்பத்தினரிடமிருந்தும் துணைவரைத் தனிமைப்படுத்துவது;
- துணைவரை அவமானப்படுத்துவது அல்லது தொடர்ந்து விமர்சிப்பது;
- துணைவரை உடலுறவு கொள்ளப் பலவந்தப்படுத்துவது
- குழந்தைகளை அல்லது செல்லப்பிராணிகளை மிரட்டுவது

## ஆண்களுக்குள்ள அதே உரிமைகள் பெண்களுக்கும் உள்ளன.

அவுஸ்திரேலியாவிலுள்ள சட்டங்கள் ஆண்களையும் பெண்களையும் சமமாக நடத்தும்.

ஒவ்வொருவருக்கும் தமது குடும்பங்களுடனும் நண்பர்களுடனும் அன்புக்குரியோருடனும் நேரிய, பாதுகாப்பான உறவுகளை அனுபவிக்க உரிமையுண்டு. வன்முறை ஒருபோதும் சரியாவதில்லை. மோசமாகக் கவனிக்கப்படுவதையோ தீங்கிழைக்கப்படுவதையோ எவரும் ஏற்கக் கூடாது.

## கலாசார உணர்வுகளைக் கருத்திற் கொண்டு உங்களுக்கு உதவக்கூடிய சேவைகள் அவுஸ்திரேலியாவில் உள்ளன.

**1800RESPECT** என்பது ‘அவுஸ்திரேலிய தேசிய பாலியல் தாக்குதல், வீட்டு, குடும்ப வன்முறை ஆலோசனைச் சேவை’ (Australia’s national sexual assault, family and domestic violence counselling service) ஆகும். இலவச, இரகசியமான தொலைபேசி, இணையவழி ஆலோசனையையும் தகவல்களைம் இது அளிக்கிறது. அறிவுரையாலோசகர்கள் நீங்கள் சொல்வதை செவிமடுத்துக் கேட்பர், உங்கள் கேள்விகளுக்கு பதிலளிப்பர், நீங்கள் வாழும் பகுதியிலுள்ள மற்ற ஆதரவு சேவைகளுக்கு உங்களைப் பரிந்துரைக்க அவர்களால் இயலக்கூடும்.

**1800 737 732** எனும் இலக்கத்தினை அழையுங்கள் அல்லது **1800RESPECT** இன் **www.1800RESPECT.org.au** எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்

## உரைபெயர் ப்பாளர் ஒருவர் தேவையா?

**131 450** எனும் இலக்கத்தில் ‘மொழிபெயர்ப்பு, உரைபெயர்ப்பு சேவை’யை **(Translating and Interpreting Service)** அழையுங்கள். மற்றச் சேவைகளுடன் தொடர்புகொள்ள TIS உரைபெயர்ப்பாளர் ஒருவர் உங்களுக்கு உதவ இயலும். ஆயினும் TIS நிறுவனம் ஆலோசனை அளிப்பதில்லை. அழைப்புக்கள் யாவும் இலவசமானவையும் இரகசியம் பேணுபவையம் ஆகும்.